2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

யோகா மற்றும் தியான மையம்

***7135—திருமதி பொன். சரஸ்வதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோட்டில் யோகா மற்றும் தியான மையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) யோகா மற்றும் இயற்கை வாழ்வியல் மருத்துவமனைப் பிரிவு, நாமக்கல் மாவட்ட தலைமை மருத்துவமனையில் நல்லமுறையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதன்மூலம் மக்கள் பெரிதும் பயன்பட்டு வருகிறார்கள். ஆகையினால், திருச்செங்கோட்டிலே யோகா மையம் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானுலகை ஆட்சி செய்ய, வானவர்கள் களவாடிச் சென்ற ஏற்றமிகு சாதனை, சரித்திரத்தின் போற்றுதலுக்குரிய தவப் புதல்வி, வசந்த காலப் பூக்கள் எல்லாம் அசந்து போகும் புன்னகை தவழும் அழகு முகம், கம்பீரமான சிங்கப் பார்வை கொண்ட அறிவுலக மேதையரும் அடிபணிந்து ஞானம் பெறும் (மேசையைத் தட்டும் ஒலி) கருத்துகளின் பெட்டகமாய்த் திகழ்ந்த, தவ வாழ்வின் மகத்துவத்தை உலகறியச் செய்த 'மக்களால் நான்' என்று மக்களுக்காகவே வாழ்ந்த மங்காப் புகழ் படைத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதில் இன்றும், என்றும் வீற்றிருக்கிறார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா என்னும் தெய்வத்தை முதலில் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி), கழகப் பொதுச் செயலாளர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யோகா தியான மையம் அமைப்பது திருச்செங்கோடு பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. யோகாவும், தியானமும் செய்வதனால் மனதிற்கும், உடம்பிற்கும் புத்துணர்வு ஏற்படுகிறது. ஆகையால் எனது தொகுதியில் அனைத்து மக்களின் நலன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறுவது உண்மைதான். யோகா மற்றும் தியானம் செய்வது மனதிற்கும், உடலுக்கும் புத்துணர்ச்சி அளிக்கும். இந்தக் கருத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உணர்ந்த காரணத்தினால்தான், இந்தியாவிலேயே எந்த*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2017 மார்ச் 23]

மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, (மேசையைத் தட்டும் ஒலி) முதன் முதலாக Lifestyle Clinic for Yoga *என்ற வாழ்வியல் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும் என்று விதி 110-ன்கீழ் அறிவித்து, 9 கோடியே, 60 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகள், அதாவது 31 மாவட்ட தலைமை மருத்துவமனைகள், 18 மருத்துவக் கல்லூரிகள் மற்றும் ஓமந்தூரார்* Multi Super Speciality Hospital *உள்ளிட்ட 50 இடங்களில் அமைத்து, அவை மிகச் சிறப்பாக செயல்பட்டு, பொது மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றிருக்கின்றன. வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்று இல்லை. தாங்கள் பொது மக்களுக்காக கேட்பது நியாயம். இனி வருங்காலத்தில், திருச்செங்கோட்டிலும் அந்த மையத்தைத் தொடங்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோட்டில் யோகா மற்றும் தியான மையங்கள் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் எனத் தெரிவித்துள்ள மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* V.T. *கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்து, தமிழக மக்கள் அனைவருடைய இதயங்களிலும், மறைந்தும், மறையாமலும் குடிகொண்டிருக்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், தியாகத் தலைவி சின்னம்மா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி வேட்பாளர் அண்ணன் தினகரன் அவர்களையும் வணங்குகிறேன்.*

விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட வேப்பூர் தாலுகாவில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தாலுகா மருத்துவமனையாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தரமுயர்த்தித் தந்தமைக்கு, முதலில் எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தாலுகா மருத்துவமனையில், போதிய மருத்துவர்களை உடனடியாக நியமனம் செய்து அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு மருத்துவ வசதியை சிறப்பாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் எத்தனை இருக்கின்றனவோ, அவை உடனடியாக நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

***9632—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*